(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUCHENGODE
**CC.No.196/2025**

Deposition of Prosecution/Defence/Court Witness for PW.1 (LW.1)

| | | |
|---|---|---|
| Name | : | நித்திஷ் |
| Father's/Husband Name | : | தங்கவேல் |
| Village | : | ஆண்டிபாளையம் |
| Taluk | : | திருச்செங்கோடு |
| Occupation | : | வழக்கறிஞர் |
| Age | : | 24 |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சி விசாரிக்கப்படுகிறார். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act of 1969) on the day of **13.07.2026.**

**முதல் விசாரணை:–**

கடந்த 12.05.2025ம் தேதி சித்ரா பௌர்ணமியை முன்னிட்டு அருள்மிகு ஆறுமுகநாத சுவாமி கோவிலுக்கு கிரிவலம் சென்றேன். கிரிவலத்திற்கு செல்வதற்கு முன்பு எனது பேண்ட் பாக்கில் எனது கைப்பேசியை வைத்துக்கொண்டு நடந்து சென்று கொண்டிருந்தேன். அங்கு கூட்டமாக இருந்தது. மாலை சுமார் 6.30 மணியளவில் கிரிவலத்தை முடித்துவிட்டு சாமி தரிசனம் செய்துவிட்டு வந்தபோது எனது பேண்ட் பாக்கெட்டில் இருந்த எனது கைப்பேசியை (Redmi Note–9 Promax) காணவில்லை. அக்கம் பக்கம் உள்ளவர்களிடமிருந்து அவர்களது கைப்பேசியை வாங்கி எனது கைப்பேசிக்கு கால்(call) செய்து பார்த்தேன். எனது கைப்பேசி சுவிட்ஆப் என்று வந்தது. பின்னர் அக்கம் பக்கத்தில் உள்ளவர்களிடம் விசாரித்தபோது ஈஸ்வரி – Nokia

Android Phone மற்றும் நந்தினி – IQ Phone ஆகியவையும் காணவில்லை என்று தெரிந்துகொண்டேன். பின்னர் நாங்கள் அனைவரும் கூட்டமாக இருந்ததால் சுமார் 2 மணிநேரமாக தேடிக்கொண்டிருந்தோம். குளாலர் திருமண மண்டபம் அருகே ஒரு நபர் நாங்கள் தேடிக்கொண்டிருந்ததை பார்த்தவுடன் வேகமாக ஓடி அங்கு நின்றுகொண்டிருந்த இருசக்கர (TVS Jupiter) வாகனத்தை எடுக்க முயன்றார். நாங்கள் அனைவரும் அவரைப்போய் பிடித்துக்கொண்டோம். பின்னர் அந்த நபரிடம் அவரது இருசக்கர வாகனத்தை காண்பிக்குமாறு கேட்டபோது அவர் மறுத்துவிட்டார். பின்னர் அவரிடமிருந்து சாவியை பெற்றுக்கொண்டு அவரது இருசக்கரவானத்தின் பின்பக்கத்தை திறந்து பார்த்தபோது காணாமல் போன மூன்று செல்போன்களும் இருந்தன. பின்னர் மேற்படி விபரத்தை போலீசாருக்கு தெரிவித்துவிட்டு எதிரியையும், அவருடைய இருசக்கர வாகனத்தையும் எடுத்துக்கொண்டு நாங்கள் காவல் நிலையம் சென்றோம். பின்னர் காவல் நிலையம் சென்றவுடன் எதிரி மீது நடவடிக்கை எடுக்கும் படி புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் படிவம் –91ல் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். மேற்படி படிவத்தில் போலீசார் மொபைல் போன் –3 மற்றும் 1– இருசக்கர வாகனத்தை கைப்பற்றியதாக போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். அதற்கு சாட்சியாக நானும், ஈஸ்வரி என்பவரும் கையெழுத்து செய்தோம். அந்த படிவம் –91 **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது போனை நான் நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக்கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள கைபேசி என்னுடையதுதான். அந்த புகைப்படங்கள் **அ.சா.ஆ.3 (2 எண்ணிக்கை)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள இருசக்கர வாகனத்தைத்தான் போலீசாரிடம் நான் ஒப்படைத்து அதை போலீசார் கைப்பற்றினார்கள். அந்த புகைப்படங்கள் **அ.சா.ஆ.4 (4 எண்ணிக்கை)** ஆக

குறியீடு செய்யப்படுகிறது. ஆஜர் எதிரிதான் சம்பவத்தன்று எனது செல்போனை திருடி சென்ற நபர் அவர். அவரைத்தான் நான் காவல் நிலையத்தில் ஒப்படைத்தேன். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

நான் திருச்செங்கோட்டில் எத்தனை வருடங்களாக குடியிருந்து வருகிறேன் என்றால் நான் பிறந்தது முதல் திருச்செங்கோட்டில்தான் வசித்து வருகிறேன். எத்தனை செல்போன் காணாமல் போனது என்று நான் புகாரில் எண்ணிக்கை குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. நான் செல்போனை எங்கு வைத்திருந்தேன் என்று புகாரில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். என்னை தவிர இந்த வழக்கில் வேறு யாரும் புகார் அளித்தார்களா என்றால் இல்லை. சம்பவதன்று சித்ரா பௌர்ணமி கிரிவலப்பாதை கூட்டமாகவும், பொதுமக்கள் அதிகமாகவும் இருப்பார்கள் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் எந்த செல்போனையும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் வைத்துத்தான் பார்த்தேன். செல்போன் எனக்கு சொந்தமானது என்பதை காட்ட அதன் பில்லை நான் தாக்கல் செய்து போலீசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் ஒப்படைத்தேன். கோவிலிருந்து காவல் நிலையம் நடந்து செல்லும் தூரத்தில் உள்ளது என்றால் சுமார் 500 மீ. தூரத்தில் உள்ளது. அ.சா.ஆ.1 புகாரில் 2 வது பக்கத்தில் வாசகங்கள் எழுதி முடிக்கப்பட்ட இடத்திற்கும், எனது கையெழுத்திற்கும் இடையே பெரிய இடைவெளி உள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.1 புகார் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு வெளியே வைத்து நான்தான் எழுதினேன். நான் சொன்ன தேதி மற்றும் நேரத்தில் நான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் பெற்றுதாளில் கையெழுத்து செய்துகொடுத்தேன் என்றால் சரியல்ல. புகாரை போலீசார் பின்னிட்டு தயார் செய்தார்கள் என்றால் சரியல்ல. நான் சொன்னவாறு சொன்ன தேதி மற்றும் நேரத்தில் சொன்ன இடத்தில் எந்த சம்பவமும்

நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதி மற்றும் இடத்தில் எதிரி அங்கு இல்லை என்றால் சரியல்ல. நான் சொன்னவாறு சொன்ன தேதி மற்றும் நேரத்தில் சொன்ன இடத்தில் எதிரியை நான் பிடிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்னவாறு சொன்ன தேதி மற்றும் நேரத்தில் சொன்ன இடத்தில் எதிரியிடமிருந்து எந்த செல்போனையும் நான் பார்க்கவில்லை மற்றும் போலீசாரிடமும் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவ நாளில் கூட்டம் அதிகமாக இருந்ததால் போலீசார் கூட்டத்தை கட்டுப்படுத்த அங்கிருந்தார்கள் என்றால் சரியல்ல. அங்கு பணியில் இருந்த போலீசாரிடம் செல்போன் காணவில்லை என்று சொன்னேன் என்றால் சரியல்ல. எதிரியை சம்பவ இடத்திலிருந்து காவல் நிலையத்திற்கு யார் யார், எந்த வாகனத்தில் அழைத்துச் சென்றோம் என்றால் இரண்டு வாகனங்களில் அழைத்துச்சென்றோம். எதிரியின் வாகனத்தில் எதிரியும், நானும், மற்றொரு பெண்ணும் காவல் நிலையம் சென்றோம். மற்றொரு வண்டியில் ஈஸ்வரி என்ற பெண் வந்தார். எதிரியின் வாகனத்தில் சீட்டிற்கு அடியில் செல்போன் வைத்திருந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரியை எனக்கு யார் என்றே தெரியாது என்றாலும், போலீசாரின் கட்டாயத்தின்பேரில் நான் பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரியை 12.05.2025ம் தேதியன்று நான் காவல் நிலையத்தில் வைத்து பார்க்கவில்லை என்றால் சரியல்ல. எதிரியை இன்றுதான் நீதிமன்றத்தில் முதல் முறையாக பார்க்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**:– இல்லை

RANGARAJ P Digitally signed by RANGARAJ P Date: 2026.07.13 18:24:00 +0530